முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 11.08.2026

O.S No. 26/2025

வா.சா.1- குத்தாலம்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் வாதி எனக்கு அதிகாரபத்திரம் கொடுத்தார் என்றால் சரி. எனவே இந்த வழக்கின் பிராது எனது அறிவுறுத்தலின்படி தயார் செய்யபடவில்லை என்றால் சரியல்ல நானும் என் அப்பாவும் சேர்ந்து வழக்கறிஞருக்கு சொன்னோம். எந்த தேதியில் பிராது தாக்கல் செய்யபட்டது என்றால் ஞாபகமில்லை. எந்த தேதியில் எனக்கு அதிகாரபத்திரத்தை வழக்கிற்கு பின் என் அப்பா கொடுத்தார் என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 ஐ படித்து பார்த்துள்ளேன். அதில் பக்கம் 3 ல் முன்பணம் 1 லட்சத்து 20 ஆயிரமும் டெபாசிட்டாகவும் வட்டி ரூபாய் 1200 என்றும் எழுதபட்டுள்ளது என்றால் சரி.வாடகைக்கு பதில் வட்டியை கழித்து கொள்வதாக பேசி கொண்டோம். அந்த விவரத்தை 4 வது பக்கத்தில் 3 வது பத்தியில் சொல்லபட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.1 ல் 8 வது பக்கத்தில் வழக்கு சொத்தின் விவரம் முழுமையாக சொல்லபட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.1 ல் நிபந்தனையின் அடிப்படையில் 1 லட்சத்து 20 ஆயிரத்தை கடனாகவும் அதற்கு வட்டி ரூ.1200 ஐ வாடகையாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரி.

2. எனவே மேற்படி ஆவணத்தின் படி 1 லட்சத்து 20 ஆயிரம் கடனாகவும் அந்த கடனுக்கு பட்டிகை சொத்து ஈடாகவும் எழுதி கொடுக்கபட்டது என்றா'ல் சரி. வா.சா.ஆ.1 ல் பக்கம் 5 ல் 2 வது நபர் கட்டிடத்தை காலி செய்யும்போது 1 லட்சத்து 20 ஆயிரத்தை வட்டியில்லாமல் திரும்ப பெற்று கொள்ள வேண்டும் என்று சொல்லபட்டுள்ளது என்றால் சரி. வா.சா.,ஆ.1 ஆனது ஒத்தி பத்திரமாக கருதபட வேண்டியது என்றால் சரி. வா.சா.ஆ 1 ஆவணம் வாடகை ஒப்பந்த ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில்

வாடகை கேட்க எந்த உரிமையும் இல்லை என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.1 ல் 1 லட்சத்து 20 ஆயிரத்தை என் அப்பா தனிநபராக கொடுக்கபட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நானும் அப்பாவும் சேர்ந்து பணத்தை கொடுத்தோம். வா.சா,ஆ.1 ஆவணத்தின் 1வது பக்கத்தில் திருமதி. மாதவம்மாள் என் அப்பாவிற்கு தனிநபர் குத்தகைக்கு கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

3. ஒத்தி ஆவணம் என்பதால் 12 வருடத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும் என்றாலும் அந்த ஆவணத்தை வாடகை ஆவணமாக எடுத்து கொள்ளமுடியாது என்றால் சரியல்ல.99 ஆண்டுகளுக்கு வா.சா.ஆ.1 வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளோம்.வா.சா.ஆ.2 ஆவணம் யார் யாருக்கு எழுதி கொடுத்த செட்டில்மென்ட் ஆவணம் என்றால் செல்லம்மாள் மாதவம்மாளுக்கு எழுதி கொடுத்த ஆவணம், எந்த இடத்தில் குறிப்பிட்டுள்ளது என்றால் எனக்கு எழுத்துக்கள் படிக்கும் அளவுக்கு இல்லை. அந்த ஆவணத்திற்கு படிக்ககூடிய அளவிற்கான மொழிபெயர்ப்பு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை அதை பூதகண்ணாடி வைத்து பார்த்தால் படிக்க முடியும். வா.சா.ஆ.3 கிரய பத்திரத்தில் பட்டிகை சொத்து குறிப்பிட்டு கூறபடவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழில் சொத்து விவரத்தில் 15.956 சென்ட் என்று மட்டுமே குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.3 கட்டிட விவரத்தில் நகராட்சி கதவு எண் 223/3 என்று துலங்கியுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.3 ல் 2018 ம் ஆண்டு கட்டிடத்தின் வயது 40 என்று விவரிக்கபட்டுள்ளது என்றால் சரி 45 வருடத்திற்கு மேல் இருக்கும். வா.சா.ஆ.5 வருமான வரி கணக்கு செலுத்தியதற்கான செல்லான் என்றால் சரி. அதில் குற்றாலிங்கம் மிசினரி ஸ்டோர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. குற்றாலிங்கம் மிசினரி ஸ்டோர்ஸ் தனிநபர் நிறுவனம் இல்லை என்றாலும் பங்குதாரர் நிறுவனம் என்றாலும் சரி.

4. வா.சா.ஆ.5 ஆவணமானது வருமான வரி செலுத்தியதற்கான செல்லான் என்றாலும் எந்த வருமானத்திற்கு என்ன வரி செலுத்தினேன் என்ற கணக்கு ஆவணம் இல்லை என்றால் எனக்கு தெரியாது என் அண்ணன் தான் வருமான வரி செலுத்துவார். வா.சா.ஆ.7 ஆவணத்தில் எந்த கணக்காளராவது கையொப்பம் செய்யபடவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.7,8 கணக்கு பட்டியலை பார்க்கும் போது வழக்கு சொத்தின் வாதியானவர் அடமானத்திற்கு பட்டிகை சொத்தை தனிநபராக எடுத்து மிசினரிக்கு கீழ்வாடகை விட்டதாக துலங்கும் என்றால் சரியல்ல, கீழ்வாடகை கொடுக்கவில்லை.

5. வா.சா.ஆ.5 ஆவணத்தில் அந்த கடையானது 223/சி கதவு எண் கொண்ட கட்டிடத்தில் இயங்குவதாக உள்ளது என்றால் சரி. இதில் இருந்து என் அப்பா தனிநபராக இருந்து மிசினரிக்கு கீழ்வாடகை விட்டதாக துலங்கும் என்றால் சரியல்ல. குத்தாலிங்கம் மிசினரி ஸ்டோர்ஸ் வேறு ஏதாவது முகவரியில் இயங்கி வருகிறதா என்றால் இல்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் கடை வாடகை ரூ.3000 கொடுத்ததாக பேலன்ஸ் சீட்டில் புலப்படுகிறது என்றால் சரி. வா.சா.ஆ.5 ஆவணத்தில் டெப்பாசிட் தொகை 120000 கொடுத்ததாக எங்கும் துலங்காது என்றால் சரி. வா.சா.ஆ.10,11 ஜிஎஸ்டி எண்ணானது பதிவு செய்யபட்டபோது 391 PWD road ஐ நிரந்தர முகவரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.6 ஆவணத்தில் 391 PWD road தரைதளம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ.9 புகைப்படங்களில் எந்த தேதியில் எந்த இடத்தில் வைத்து எடுக்கபட்டது என்பதற்கான சேட்டிலைட் விவரங்கள் எதுவும் துலங்கவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.9 புகைப்படரசீதில் குத்தாலிங்கம் மிசினரி ஸ்டோர்ஸ் மட்டுமே குறிப்பிடபட்டுள்ளது என்றாலும் முழு முகவரி குறிப்பிடபடவில்லை என்றாலும் சரி. வா.சா.ஆ.9 புகைப்படத்திற்கும் வழக்கு சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

6. வா.சா.ஆ.10 முதல் 14 வரையாக ஆவணங்கள் வவுச்சர் என்றாலும் ஆவணங்களில் குத்தாலிங்கம் மிசினரி ஸ்டோர்ஸ் மட்டுமே குறிப்பிடபட்டுள்ளது என்றாலும் முழு முகவரி குறிப்பிடபடவில்லை என்றாலும் சரி. வா.சா.ஆ.15 ஆவணத்தில் 223 சி PWD road ஐ நிரந்தர முகவரியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. 391 ன் புதிய கதவு எண் 223 சி ஆகும். எந்த வருடம் புதிய எண் கொடுக்கபட்டது என்றால் சுமார் 15 வருடங்கள் இருக்கும். வா.சா.ஆ.16 சொத்து வரி ஆவணத்தில் 223 சி சாந்தன்சட்டிவிளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. மாநகராட்சி ஆவணங்களின் படி சாந்தன்சட்டிவிளை என்று குறிப்பிடுவார்கள் புழக்கத்தில் உள்ளது PWD road. வா.சா.ஆ.20,21 ரசீதுகளில் குத்தாலிங்கம் மிசினரி என்று ம ட்டுமே உள்ளது என்றாலும் முழு முகவரி இல்லை என்றாலும் சரி. அவற்றில் அனுப்புநர் கையெழுத்தோ கம்பெனி முத்திரையோ இல்லை என்றால் சரி.

7. வா.சா.ஆ.23 உரிமை சான்றிதழில் 223 சி சாந்தன்சட்டிவிளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த உரிமமானது குத்தாலிங்கம் என்ற தனிநபர் பெயரில் உள்ளது என்றாலும் பங்குதாரர் நிறுவனத்தின் பேரில் இல்லை என்றாலும் சரி. என் அப்பா சட்டத்திற்கு புறம்பாக வழக்கு சொத்தை கீழ்வாடகைக்கு கொடுத்துள்ளார் என்றாலும் பிரதிவாதிக்கு எதிராக பொய் புகார் கொடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. என் அப்பா உண்மையான நேர்மையான தகவல்களுடன் இந்த நீதிமன்றத்தை அணுகவில்லை என்றாலும் என் அப்பா கேட்ட பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றாலும் பிரதிவாதிகள் செலவுதொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றாலும் சரியல்ல.

8. வா.சா.ஆ.26 மின்கட்டண ரசீதில் கோபாலபிள்ளை பெயரில் உள்ளது என்றால் சரி. அவர் மாதம்மாளின் கணவர் ஆவார். வா.சா.ஆ.25 ஆவணத்திற்கும் இந்த வழக்கு

சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.25 ஆவணத்தில் என் அப்பாவிற்கு கொடுத்த ஒத்தியை காண்பிக்கபட்டுள்ளது அதற்காக தாக்கல் செய்துள்ளேன். அதன் பின் கிரயம் பெற்ற முருகனின் ஆவணத்தில் எங்களது ஒத்தியை காட்டவில்லை. வா.சா.ஆ.8 ஆவணத்தில் கடைசி பக்கத்தில் பங்கு நிறுவனம் என்று குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரி. யார் யார் பங்குதாரர்கள் என்றால் குற்றாலிங்கம், சண்முகம், குத்தாலம். எனது நிருபண வாக்குமூலத்தில் 3 வது பக்கத்தில் என் அப்பாவிற்கு வயதாகி விட்டதால் நானும் என் அண்ணனும் 1994 முதல் வழக்கு சொத்தில் நிறுவனத்தை நடத்தி வருவதாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரி.

9. வா.சா.ஆ.8 ஆவணத்தில் முகவரி முழுமையாக குறிப்பிடபடவில்லை என்றால் சரி. எங்களது பங்குநிறுவனம் வழக்கு பட்டிகை சொத்தில் இயங்கி வருவதாக துலங்காது என்றால் சரியல்ல. வழக்கிற்காக நான் உண்மைகளை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.